# ஏப்ரல் 2021 வாக்குத்தத்தம்

“இப்போதும் என் தேவனே, இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் விண்ணப்பத்திற்கு உம்முடைய கண்கள் திறந்தவைகளும், உம்முடைய செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருப்பதாக” (2 நாளாகமம் 6:40).

கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது என்று சொல்லி அவரைத் துதியுங்கள். கர்த்தர் எப்பொழுதும், என்றைக்கும் நல்லவர் தான். சாலமோன் தேவனை நோக்கி, தேவனே இந்த ஸ்தலத்தில் செய்யப்படும் ஜெபத்திற்கு உம்முடைய கண்கள் திறந்தவைகளும், உம்முடைய செவிகள் கவனிக்கிறவைகளுமாக இருப்பதாக என்று ஜெபம் பண்ணினார்.

ஜெபம் என்பது வீணான அலப்பல் அல்ல. நாம் ஜெபம் செய்யும் பொழுது, எப்பொழுதும் ஆண்டவரே அதைத் தாரும், இதைச் செய்யும் என்று கேட்காமல், தேவனிடம் உங்கள் விண்ணப்பத்தைத் ஸ்தோத்திரத்துடன் தெரியப்படுத்துங்கள். நமக்கு என்னென்ன தேவை என்பதை அறிந்தவர் அவர். கேட்கிற எவனும் பெற்றுக் கொள்கிறான் என்று வேதம் கூறுகிறது. சாலமோன் ஜெபித்த ஜெபத்தைக் கேட்ட நம் ஆண்டவர், இன்றைக்கும் நம் ஜெபங்களைக் கேட்டு நிச்சயம் பதில் கொடுப்பார்.

எப்பொழுதும் ஜெபத்தில் நம்மைத் தாழ்த்த வேண்டும். கர்த்தர் அப்பொழுதுதான் பதில் கொடுப்பார். தாழ்மையுள்ளவர்களுக்குதான் கர்த்தர் கிருபை அளிக்கிறார். தாழ்மையான ஜெபத்தில்தான் கர்த்தர் மிகவும் பிரியப்படுகிறார்.

கர்த்தாவே, நீர் அபிஷேகம் பண்ணின முகத்தைப் புறக்கணியாமல், உம்முடைய தாசனாகிய தாவீதுக்கு வாக்குப் பண்ணின கிருபையை நினைத்தருளும் என்று ஆண்டவரிடம், தன் தகப்பனுக்குக் கொடுத்த வாக்குத்தத்த்ததை ஞாபகப்படுத்திக் கேட்கிறார் சாலமோன். இப்படியாக அவர் ஜெபித்தப் பிறகு, அக்கினி வானத்திலிருந்து இறங்கிற்று!

நம்மைத் தாழ்த்தி, தேவ சமுகத்தில் ஒப்புக்கொடுத்து, நம் பாவங்களை அறிக்கைச் செய்து, உண்மையுடன் அவரை நோக்கிக் கூப்பிடும்போது, கர்த்தர் நிச்சயம் நம்மீதும் அக்கினியை ஊற்றுவார்! நம் ஜெபத்திற்கு அவரின் கண்களும், அவரின் செவிகளும் திறந்திருக்கும். எல்லாவற்றைக் காட்டிலும், அவரது கரம் கிரியைச் செய்யும்! கிரியை செய்யக் கூடாத படிக்கு அவருடைய கரம் குறுகிப் போகவில்லை.

சாலமோனுக்கு மட்டும் தேவன் நல்லவரல்ல. நம் எலலோருக்கும் அவர் நல்லவர்தான். அவர் நம்மீது கிருபையைப் பொழியும்படி, சாலமோனைப் போல மன்றாடி ஜெபியுங்கள். இம்மாதத்தில் கர்த்தரின் கிருபை உங்களை நிச்சயமாய் தாங்கும்!

பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாய் இருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள் மேல் அவரது கிருபையும் அவ்வளவு பெரிதாய் இருக்கிறது. கர்த்தருடைய கிருபையோ அவருக்கு பயந்தவர்கள் மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது. சங்கீதம் 103:11,17.

அற்புத ஊழியத்தில் உங்கள் அன்பு சகோதரி,
சாந்தி சாலமோன்

**பின் குறிப்பு:** எமது வீடு மாற்றப்படும் காரியத்தில் அதிக வேலையாகவும், அலைச்சலாகவும் இருந்ததால், இம்மாதப் முழு பத்திரிகையை ஆயத்தப்படுத்த இயலாமற் போய்விட்டது. தயவு செய்து மன்னிக்கவும். அடுத்த மாதம் அற்புத ஊழியம் பத்திரிகையை குறித்த நேரத்தில் அனுப்பி வைப்போம் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.